**தலைப்பு 291 - கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 291 – கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 31 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதிஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 2,046.64 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 1,330.11 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 716.52 மில்லியன் அதாவது 35 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 219.14 | 207.61 | 11.53 | 5.26 |
| மூலதனம் | 1,827.50 | 1,122.51 | 704.99 | 38.58 |
| மொத்தம் | **2,046.64** | **1,330.12** | **716.52** | **35.01** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 29101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 9.00 | 8.98 | 7.00 | 10.02 | 39.00 | 33.38 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களத்திற்குரிய 7002/0000/00/0091/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 8.13 மில்லியனாக காணப்பட்டது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழான 04 வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 37.57 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0024/000 | 14.63 |
| 6000/0000/00/0016/0057/000 | 13.53 |
| 6000/0000/00/0002/0110/000 | 6.38 |
| 6000/0000/00/0013/0092/000 | 3.03 |
| மொத்தம் | 37.57 |

**2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை**

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை. | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | கணனி, துணைக் கருவிகள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| (இ) | அடியிதழ்சேர் பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஈ) | கிடைக்கின்ற காசோலைகள், காசுக் கட்டளை போன்றவைகளுக்காண பதிவேடு | நிதிப்பிரமாணம் 451 | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (உ) | பொருள் இருப்புப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(1) | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஊ) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| (எ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஏ) | வாகனங்கள் நிரல்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647 | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஐ) | கடமை தொலைபேசி பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1) | பேணப்பட்டிருக்கவில்லை |

3.2 **ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதிட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 16 செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டவையின் காரணமாக நிதி ஏற்பாட்டை பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டால் 11 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சினை கொண்டிருந்தது.

(ஆ) ஏனைய மூலதன முதலீட்டு செலவின விடயங்களுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 661.68 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்ததுடன் பொறுப்புக்களுக்காக ரூபா 346.52 மில்லியன் காணப்பட்டமையால் மிகை நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கக்கூடாது.

(இ) 2015 திசெம்பர் 29ம் திகதிய 7/2015 ஆம் இலக்க தேசிய பாதிட்டுச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் 2016 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளில் எரிபொருள் செலவின விடயத்திற்கான நிதி ஏற்பாட்டின் 15 சதவீதம் கட்டாயமாக சேமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மதிப்பீடு செய்யபட்ட நிதி ஏற்பாட்டில் 11.41 சதவீதம் மாத்திரமே சேமிக்கப்பட்டிருந்தது. மேலும், நிதிப் பிரமாணம் 66 இன் பிரகாரம் ரூபா 0.6 மில்லியன் நிதி ஏற்பாடு உள்நாட்டு பிரயாணச் செலவின விடயங்களுக்காக மாற்றப்பட்டிருந்தது

**3.3 பொது வைப்புக் கணக்கு**

02 வருடங்களை விஞ்சிய ரூபா 0.5 மில்லியன் கூட்டுத்தொகையான 04 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமானம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

**3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

29101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறான அறவீடுகள் நிறுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 0.69 மில்லியனாகக் காணப்பட்டதுடன், அந் நிலுவை கடன் மீதிகள் 04 மாதங்கள் முதல் 19 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து காணப்பட்டு வந்த போதிலும் அந்நிலுவை மீதியை அறவிடுவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலைமையில் காணப்பட்டது.

(ஆ) 02 வருடங்களுக்கும் 12 வருடங்களுக்கும் இடையிலான காலப்பகுதியில் சேவையை விட்டுச் சென்ற நான்கு பேர்களின் கடன் மீதி ரூபா 0.3 மில்லியனாக இருந்ததுடன் இந்தக் கடன் மீதி தொடர்பாக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

திணைக்களத்தின் பணியாளர் நாயகத்திற்கு இரண்டு உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கப்பட்டமையின் காரணமாக எல்லா வேளைகளிலும் ஒரு வாகனம் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2015 மே முதல் 2016 திசெம்பர் வரை ஒரு வாகனம் 343 நாட்கள் ஓட்டத்தில் ஈடுபட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

(i) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்தம் மேற்கொள்ளப்பட வேண்டிய பொருள் மெய்மையாய்வு 2016 ஆம் ஆண்டிற்காக குறிப்பிட்ட காலப்பகுதியில் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) வருட ஆரம்ப தினத்தில் காணப்பட்ட சொத்துக்கள் மீதியில் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் ஆண்டின் போது அகற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதி சரியாக சீராக்கப்படாமையினால் இறுதி மீதி சரியாகக் காணப்படவில்லை.

(iii) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்

திணைக்களத்தின் பெயரில் பதிவுசெய்யப்பட்டுள்ள 05 வாகனங்கள் முறையற்ற வகையில் செயற்திட்டத்திற்குக் கையளிக்கப்பட்டிருந்ததுடன் திணைக்களத்தின் இரண்டு சாரதிகளும் செயற்திட்டத்திற்காக நியமிக்கப்பட்டிருந்தனர். இந்த இரண்டு சாரதிகளுக்கும் 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் திணைக்களத்திலிருந்து சம்பளமாக ரூபா 1.65 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

(iv) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

03 மீண்டெழும் செலவின விடயங்களுக்கும் ஒரு மூலதன செலவின விடயத்திற்கும் உரிய ரூபா 0.1 மில்லியன் தொகையான பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.6 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா மில்லியன் | |
| (அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள் | | |
| 1981 இன் 57 ஆம் இலக்க கடலோரப் பாதுகாப்பு அதிகாரச்சட்டம் மற்றும் 2011 இன் 49 ஆம் இலக்க கடலோரப் பாதுகாப்பு (திருத்த) அதிகாரச்சட்டம் | | |
| (i) 9(2) ஆம் பிரிவு | - | பணிப்பாளர் நாயகத்தினால் கரையோர வலயத்தில் அனைத்து வளங்கள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட கரையோர வலயம் மற்றும் கரையோர வளங்களை முகாமைத்துவம் செய்யும் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. அவ்வாறே அத்திட்டம் 05 வருடங்களுக்கு ஒரு தடவை திருத்தம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும்,<br><br>தற்போது வரையில் 1997 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்டிரந்த மேற்கூறப்பட்ட திட்டம் திருத்தம் செய்யப்படாமல் அமுல்படுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 31 ஆம் பிரிவு | 2.95 | கடலோரப் பாதுகாப்பு பரிசு நிதியத்திற்காக இனங்காணப்படுகின்ற சகல தண்டப்பணமும் செலவு வைக்கப்பட்டு அக்கணக்குகள் வருடாந்தம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு கணக்குகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br>மீளாய்வாண்டின் இறுதி வரையிலும், அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் இந்த நிதியத்தின் |

| | | |
|---|---|---|
| | | பெயரில் பேணப்பட்டுச் செய்யப்படுகின்ற நடைமுறை வங்கிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 2.95 மில்லியனாக இருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை<br>----------------------------------------------- | | |
| VIII ஆம் அத்தியாயத்தின் 9.8 பிரிவு | 0.03 | பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக பதவி நிலையற்ற பதவியொன்றான திணைக்களத்தின் கடலோரப் பாதுகாப்பு உதவியாளர் பதவிக்காக 1/20 படி செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>--------------------------------------------------- | | |
| (i) நிதிப்பிரமாணம் 371(2) மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | 0.6 | ❖ எந்தவொரு பணிக்காகவும் பதவிநிலை உத்தியோகத்தரின் நேரடி மேற்பார்வையின் கீழ் ரூபா 25,000 ஆகக் கூடியதன் கீழ் உப கட்டுநிதி வழங்கப்பட வேண்டிய போதிலும், அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக 13 சந்தர்ப்பங்களின் போது செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. |
| | 0.88 | ❖ சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு சந்தர்ப்பத்தின் போது வழங்கக் கூடிய ஆகக் கூடிய முற்பணம் ரூபா 100,000 ஆக இருந்த போதிலும் அதற்கு முரணாக முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| | 0.56 | ❖ ஏதாவது விஷேட செயற்பாடுகளுக்கு அண்மித்த தினங்களில் முற்பணம் வழங்க முடியுமாக இருந்ததுடன் அந்தப் பணிகள் நிறைவுபெற்றதும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக பெறப்பட்ட செயற்பாட்டிற்காக எந்தவொரு தொகையோ அல்லது அதில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவோ செலவிடப்படாமல் ஒருமாதத்திற்கு மேற்பட்ட காலம் வரை தன்வசம் வைக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 371(2) (இ) | 1.1 | வழங்கப்பட்ட முற்பணம் உரிய பணி நிறைவு பெற்றதும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 1.1 மில்லியன் கூட்டுத்தொகையான பல்வேறு பணிகளுக்காக வழங்கப்பட்ட முற்பணம் 01 மாதம் முதல் 05 மாதங்கள் வரையிலான தாமதத்தின் பின்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப்பிரமாணம் 447 | - | ஆண்டின் போது வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு, செலவிடப்பட்ட மற்றும் சேமிக்கப்பட்ட நிதி ஏற்பாடு என்பவைகளை குறிப்பிட்டு செலவினப் பேரேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 1646 | - | நாளாந்த ஓட்ட அட்டவணை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) அரச நிர்வாக சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| (i) | 1992 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 26/92 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | திணைக்களத்தின் வாகனங்களில் அரச இலட்சினை பொறிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 1999 ஒக்தோம்பர் 08 ஆம் திகதிய 22/99 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1.3.1 ஆம் பந்தி | - | பிரதி மட்டத்தின் பதவிகளின் உள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு குழாம் வாகன வசதிகள் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு குழாம் வாகன வசதிகள் வழங்க முடியுமான திணைக்களத்தின் இரண்டு பிரதி பணிப்பாளர்களுக்கு உத்தியோகப்பூர்வ வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. |

## 3.7 செயலாற்றல்

2016 இன் வருடாந்த பாதிட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

மீளவாண்டில் திட்டமிடப்பட்ட ரூபா 225.5 மில்லியன் தொகையான 11 செயற்திட்டங்களை பூர்த்தி செய்தல் முன்னேற்றம் 10 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையாக இருந்ததுடன் செலவிடப்பட்ட தொகை ரூபா 120.34 மில்லியனாக காணப்பட்டது.

(ஆ) செயற்திட்டங்கள் நிறைவேற்றப்படாமை

மீளவாண்டின் போது 06 செயற்திட்டங்களுக்காக வருடாந்த மதிப்பீட்டில் ரூபா 39 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், திட்டமிடப்பட்ட பிரகாரம் உரிய செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்திட்டங்களை நிறைவேற்றாது கைவிடல்

2015 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பப்பட்டிருந்த ரூபா 90 மில்லியன் தொகையான 03 செயற்திட்டங்கள் மீளவாண்டின் போதும் நிறைவேற்றப்படாமல் கைவிடப்பட்டிருந்தது.

(ஈ) அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுதலின் செயல் முன்னேற்றம் மிகவும் நலிவான நிலையில் காணப்படாமை திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட புள்ளிவிபரங்களிலிருந்து அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே காண்ப்பிக்கப்படுகின்றது.

| **ஆண்டுகள்** | **2011** | **2012** | **2013** | **2014** | **2015** | **2016** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|---|
| இனங்காணப்பட்ட அனுமதியற்ற நிர்மாணங்களின் எண்ணிக்கை | 388 | 146 | 338 | 127 | 285 | 308 | 1592 |
| உடைத்து அகற்றுவதற்கு கட்டளையிடப்பட்ட எண்ணிக்கை | 388 | 146 | 338 | 127 | 285 | 308 | 1592 |
| உடைத்து அகற்றப்பட்ட அளவு | 83 | 34 | 0 | 08 | 13 | 13 | 151 |
| உடைத்து அகற்றுதலின் முன்னேற்றம் சதவீதமாக | 21.39 | 23.29 | 0 | 6.3 | 4.56 | 4.22 | 9.48 |
| நீதிமன்ற கட்டளையின்படி உடைத்து அகற்றப்பட்ட அளவு | 0 | 9 | 5 | 7 | 6 | - | 27 |
| செலவிடப்பட்ட செலவினம் (ரூபா.மில்லியன்) | 3.05 | 3.04 | 5.99 | 0.03 | 0.09 | 0.05 | 12.25 |

2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை 06 வருட காலத்தில் உடைத்து அகற்றுவதற்கு 1592 கட்டளைகளை வழங்கப்பட்டிருந்த போதிலும் 151 நிர்மாணங்களே உடைத்து அகற்றப்பட்டமையினால் செயல்முன்னேற்றம் 9.48 சதவீதமாக இருந்தது.

## 3.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்

திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டி செயல் நடைமுறைகளைப் பின்பற்றாமை

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த பெறுகைகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.2.1(அ) மற்றும் 5.3.14(அ) வழிகாட்டிகளின் பிரகாரம் கேள்வி கோரல் ஆவணங்களில் சகல விடயங்களையும் உள்ளடக்கிய கூறுவிலைகள் கோரப்பட வேண்டும். எனினும் கரையோரப் பாதுகாப்பு செயற்திட்டங்களில் கூறுவிலை கோரும் போது கேள்வி ஆவணங்களில் ஒன்றுகொன்று வேறுபட்ட நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ii) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.8(அ) வழிகாட்டியின் பிரகாரம் செயலாற்றல் காப்பீடு 5 சதவீதத்திற்கு குறையாத தொகையென்று நிறுத்தி வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், எகொட உயன அலைதாங்கிக்காக மூலப்பொருட்களை வழங்கும் போது குறித்த செயலாற்றல் காப்பீட்டை விட ரூபா 0.1 மில்லியன் குறைவாகப் பெறப்பட்டிருந்தது. கப்பல் அடிய செயற்திட்டத்தின் ஒப்பந்தத்திற்காக செயலாற்றல் காப்பீடு பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) போட்டியாளர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் கேள்வி நிராகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கப்பல் அடிய செயற்திட்டத்திற்காக கூறுவிலை கோரும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.12.1, 7.12.2 மற்றும் 7.12.13 ஆம் வழிகாட்டிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தத்தை நிறைவேற்றாத வழங்குனர்கள் பெறுகை வழிக்காட்டிக் கோவையின் 8.11.5 ஆம் வழிக்காட்டியின் பிரகாரம் கறுப்புப்பட்டியலில் இடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(v) 2016 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கைகளின் பிரகாரம் மேற்கூறப்பட்ட தலவில வடக்கு குரொய்னய மற்றும் எகொட உயன அலைத்தாங்கி என்பவற்றின் நிர்மாணத்தின் பௌதீக செயல் முன்னேற்றம் 100 சதவீதமாக செயல்முன்னேற்ற அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12.2 ஆம் வழிக்காட்டியின் பிரகாரம் வேலை பூர்த்தி செய்தல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.9 நட்டம் மற்றும் இழப்புக்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2016 இன் ஒதுக்கீட்டுக் கணக்கின் டீ.ஜீ.எஸ்.ஏ 7(1) இல் தொடர்ந்தும் முன்கொண்டுவரப்படுகின்ற பதிவழிக்கப்படாத நட்ட இழப்பு மீதி ரூபா 0.01 மில்லியன் ஆக இருந்ததுடன் நிதிப்பிரமாணம் 109 மற்றும் 113 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்தின் கரையோரப் பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த பிரகாரம் நிறைவேற்றப்படாமையின் அடிப்படையில் அறவிடவேண்டிய தாமதக் கட்டணம் ரூபா 2.59 மில்லியன் ஆக இருந்த போதிலும் அது அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.10 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

திணைக்களத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடங்கப்பட்டிருந்த கணக்காய்வு பந்திகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பற்றாக்குறை தொடர்பாக திணைக்களத்தில் சீரமைக்கப்படாத பந்திகளுக்குரிய தொடர்பு கீழே காணப்படுகின்றது.

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|---|
| | ஆண்டு | பந்தி இலக்கம் | |
| (அ) | 2013 | 8.10(ஆ) | திணைக்களத்திற்கு சொத்துக்களை கையேற்கும் போது சரியான திட்ட முறைமையொன்று பின்பற்றப்படாமையினால் ஏற்பட்ட ரூபா 4.09 மில்லியன் தொகையான நட்டம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) | 2013 | 8.12(அ)(ii) | கெபுன்கொட அலைதாங்கியின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படாத வகையில் நிர்மாணிக்கப்பட்டமையால் ஒரு பகுதியை உடைத்து அகற்ற வேண்டி ஏற்பட்டமையால் திணைக்களத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 25.78 மில்லியன் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) | 2014 | 9.12(ஆ) | உடைத்து அகற்றுவதற்கான கட்டளை வழங்கப்பட்டதன் பின்னர் அந்த பணிக்காக அனுமதிப் பத்திரமொன்றை வழங்குதல் மற்றும் அதற்காக மீண்டும் ஒரு தடவை விடுக்கப்பட்ட உடைத்து அகற்றும் கட்டளையின் பிரகாரம் முழு கட்டிடத்தையும் அகற்ற வேண்டியிருந்த போதிலும், 04 மாடிகளையுடைய இக்கட்டிடத்தின் 02 மாடிகள் மாத்திரம் உடைத்து அகற்றப்பட்டிருந்தமை. |
| (ஈ) | 2014 | 9.14(ஆ) | தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற கம்பனி கவனத்தில் கொள்ளப்படாமல் இரண்டாவது குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த கம்பனிக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டமையால் திணைக்களத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 89.83 மில்லியன் ஆகும். |
| (உ) | 2014 | 9.14(இ) | அலைதாங்கி நிர்மாணம் மற்றும் மணல் குவிப்பு ஒப்பந்தத்திற்காக ஒப்பந்தக்காரர்களுடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கை காலத்திற்கு இணங்க வேலை செய்யாமையின் அடிப்படையில் அறவிட வேண்டிய ரூபா 11.49 மில்லியன் தொகையான தாமதக் கட்டணம் அறவிடப்படாமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2015 | 3.5(அ) | 2011 இன் 49 ஆம் இலக்க கரையோரப் பாதுகாப்பு திருத்த அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தால் 2011 முதல் 2015 வரையான காலப்பகுதியில் உடைத்து அகற்றுவதற்காக செலவிடப்பட்ட ரூபா 12.23 மில்லியன் தொகையினை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (எ) | 2015 | 3.7(அ) | உணவட்டுன மணல் குவிப்பு செயற்திட்டத்திற்காக திணைக்களத்திற்கும் ஒப்பந்தக்காரருக்கும் இடையே 2014 திசெம்பர் 04 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நிறைவேற்றப்பட்ட பணிகளின் வேலை சான்றிதழின் அடிப்படையில் இல்லாமல் ஒப்பந்தக்காரர்களின் அடிப்படையில் மேலதிகமாக வழங்கிய மணலின் 14,070 கான மீற்றருக்காக செலுத்திய கொடுப்பனவால் திணைக்களத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 20.1 மில்லியன் ஆகும். |
| (ஏ) | 2015 | 3.7(ஆ) | உணவட்டுன அலைதாங்கி நிர்மாணத்தின் போது விஞ்ஞானரீதியிலான ஆய்வொன்று மேற்கொள்ளாமையினால் இந்த அலைதாங்கியில் விலகிய பகுதியை நிர்மாணித்தல், அந்தப் பகுதியை மீண்டும் பிரித்து அகற்றுதல் மற்றும் தாமதக்கட்டணம் குறைவாக அறவிடப்பட்டமையால் திணைக்களத்திற்கு ஏற்பட்ட மொத்த நட்டம் ரூபா 71.49 மில்லியன் ஆகும். |

## 3.11 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 41 | 29 | 12 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 01 | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 321 | 247 | 74 |
| (iv) | ஆரம்ப நிலை | 174 | 108 | 66 |
| | மொத்தம் | **540** | **385** | **155** |

முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை முறையே 217 மற்றும் 155 ஆக இருந்ததுடன் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை